**26.03.2026**

அ.வ.எண்.**117/2021**

<u>பி.சா.2 ஏழுமலை குறுக்கு விசாரணை</u>

1. இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் சாட்சி சொல்வதற்கு 1ம் வாதிதான் அழைத்து வந்தார். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் உறவினர் கிடையாது, தெரிந்த நபர். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவாசொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். தாவாசொத்தின் ஜக்குபந்தி தெரியாது என்றால் சரிதான். தாவாசொத்தை பற்றிய விவரங்களை தெரியாதபோது வழக்கின் சொத்து சரியான சொத்து விவரமா என்பது தெரியாது என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி சந்திரா மற்றும் 2ம் பிரதிவாதி கல்யாணி சென்னையில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பழமத்தூர் கிராமத்தில் தனுசு அம்மாளின் வாரிசுகள்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கு பவ்வியபட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன், இவ்வழக்கை பற்றியும், வழக்கு சொத்தை பற்றியும் எந்த விவரம் தெரியாது என்றால் சரியல்ல.